செ.வெ.எண்.334 நாள்.23.05.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் சமூகப்பாதுகாப்புத்துறை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பாக 23.05.2018 அன்று மாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தைகள் இல்லங்களை சார்ந்த பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்ட நிறுவன செயல்பாடுகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் குறித்த பயிற்சி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வைத்து நடைபெற்றது.

இப்பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சந்தீப் நந்தூரி** அவர்கள் தலையேற்று துவக்கிவைத்தார். பாதுகாப்பு அலுவலர் திருமதி.R.கார்த்திகா வரவேற்புரை வழங்கினார். மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திரு.B.S.தேவ் ஆனந்த் அவர்கள் பயிற்சியின் நோக்கம் குறித்து தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் தலைமை உரையில் இணையதள பதிவேற்றத்தின் முக்கியத்துவம், குழந்தைகள் இல்ல மேம்பாடு, தொட்டில் குழந்தை திட்டம் செயல்படுத்துதல் குறித்து விரிவாக தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் கெம்பா நிறுவனம் ஆகியன இணைந்து Earn While Learn திட்டம் மூன்றாண்டு டிப்ளமோ பயிற்சியோடு கூடிய உதவிதொகை (முதல், இரண்டு, மூன்றாவது ஆண்டு முறையே ரூ.9500, ரூ.10500, ரூ.11500) பெறும் திட்டம் குறித்து கெம்பா நிறுவன மேலாளர் திரு.கிருஷ்ணன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இதன்படி பன்னிரெண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவ மாணவியருக்கு மூன்றாண்டு பயிற்சி காலத்திற்கு மாதந்திர ஊக்கதொகையோடு வேலைவாய்ப்பு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தொடர்ந்து மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பணியாளர்களான திருமதி.G.ஜான்சிராணி மற்றும் திருமதி.P.பிரிதிக்ராணி ஆகியோரால் இணையதள பதிவேற்ற பயிற்சி வழங்கப்பட்டது. முடிவில் பாதுகாப்பு அலுவலர் திரு.A.ஜெயசீலன் நன்றி கூறினார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.